தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, ஆவணி 8, திருவள்ளுவர் ஆண்டு—2046

2015 ஆகஸ்ட் 25, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை."

சுழன்று கொண்டிருக்கும் இவ்வுலகில் மக்கள் பல தொழில்களைச் செய்தாலும், அவையனைத்தும் உழவுத் தொழிலையே நம்பி உள்ளன. எனவே, முதன்மையான தொழிலாக விளங்குவது உழவுத் தொழிலே.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள் விடைகள். வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

121—

மின் பகிர்மான வட்டம்

***54168—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2015 ஆகஸ்ட் 25

(அ) திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்தை இரண்டாகப் பிரித்து தென்காசியில் புதிய மின் பகிர்மான வட்டம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நிதிநிலைமைக்கேற்பவும், நுகர்வோர்களின் வசதிக்கேற்பவும், திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்தை இரண்டாகப் பிரித்து, தென்காசியில் புதிய மின் பகிர்மான வட்டம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக மக்களின் நலன் காத்திட, இந்த நான்கு ஆண்டுகளில் அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழகத்தை முன்னோடி மாநிலமாக மாற்றி, சாதனை படைத்து வரும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி முதல்வர் அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவரான திரு. ரா. சரத்குமார் அவர்களின் சார்பாகவும், தென்காசி தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம் 250 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உடையது. இம்மாவட்டத்தில் உள்ள மின் பகிர்மான வட்டம் ஏழு மின் பகிர்மானக் கோட்டங்களை உள்ளடக்கியதாகும். திருநெல்வேலி நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறம், வள்ளியூர், கல்லிடைக்குறிச்சி, தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோவில் ஆகிய பகுதிகளிலுள்ள நுகர்வோர் மேற்காணும் மின் பகிர்மானக்

2015 ஆகஸ்ட் 25]

கோட்டங்களுக்கு குறைந்தபட்சம் 100 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து, திருநெல்வேலி மின் பகிர்மான வட்ட அலுவலகத்திற்குச் சென்று, தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய நிலையுள்ளது. இதனால் கால விரயமும், பொருள் செலவும் ஏற்படுகின்றது. தற்போது நுகர்வோர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வரும் நிலையில், மின் நுகர்வோர்களின் வசதி மற்றும் மேம்பாட்டிற்காக, இந்த மின் பகிர்மான வட்டத்தைப் பிரிப்பதனால் மின் தடை குறையும், நிருவாகத் திறன் அதிகரிக்கும், நுகர்வோர்களுக்குச் சிரமம் குறைந்து பயன் அதிகரிக்கும், அரசுக்கும் வருவாய் உயர்வு கிடைக்கும். தென்காசி பகுதியில் வேளாண்மை மற்றும் சுற்றுலா வளர்ச்சியும் மேம்படும். மிகப் பெரிய திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்தைப் பிரித்து, தென்காசியைத் தலைமையிடமாகக்கொண்டு புதிய மின் பகிர்மான வட்டம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், தலைவரின் சார்பாகவும், என் சார்பாகவும் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியவாறு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் பரிவுடன், நிதிநிலைமைக்கேற்ப இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்று முன்பே தெரிவித்திருக்கிறேன். ஆகவே, திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்தை இரண்டாகப் பிரிப்பதைக் கொள்கை அளவிலே மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஏற்றுக்கொண்டிருக்கின்றது. ஆனால், நிதிநிலைமைக்கேற்ப உரிய காலத்திலே இரண்டாகப் பிரிக்கின்ற பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஏழு கோட்டங்கள் உள்ளன. இதனை மாண்புமிகு உறுப்பினர் தனது துணைக் கேள்வியிலேகூட விரிவாகச் சொல்லியிருக்கிறார். மேலும், 30 உப கோட்டங்களும், 110 பிரிவு அலுவலகங்களும் அங்கே இருக்கின்றன. இதைப் பிரிப்பதற்குண்டான எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. அதிலே

மாற்றுக் கருத்து ஒன்றுமில்லை. பெரிய பகிர்மான வட்டமாகத்தான் இது இருக்கின்றது. தென்காசி மின் பகிர்மான வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது ஆண்டுக்கு தொடர் செலவினமாக இரண்டு கோடி ரூபாய் அளவில் அரசுக்கு ஏற்படும். மேலும், அந்தப் புதிய அலுவலகத்தில், மேற்பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் அலுவலர்களை நியமிக்க வேண்டும். கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்யும்போது அதிகளவில் செலவினம் ஏற்படும் என்பதுதான் இப்போது இடையூறாக இருக்கின்ற ஒரே பிரச்சினையாகும். ஆகவே, நிதிநிலைமைக்கேற்ப திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்தை இரண்டாகப் பிரித்து தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு வட்டத்தை உருவாக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாட்சி புரிந்துவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, நான் கடந்த முறை கேட்ட கேள்விக்கு ஆண்டிப்பட்டி தொகுதி அரசு மருத்துவக் கல்லூரி அருகில் புதிய டிரான்ஸ்பார்மர் அமைக்கக் கேட்டிருந்தேன். அதற்கு நிதியும் ஒதுக்கி பணிகளும் தொடங்கின. பணிகள் நடைபெறுகின்ற வேளையில் ஒரு தனி நபர் நிலத்தின் வழியாக அந்த மின்கம்பி செல்வதால் தடைபட்டு, வேலை தாமதப்படுகின்றது. அதை உடனடியாகச் செய்து முடிக்க அரசு முன்வருமா எனத் தங்கள் மூலமாகக் கேட்டு அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அது தேனியிலே மட்டுமல்ல; பல இடங்களிலே நாம் மின்சார வழித்தடத்தை*

அமைக்கின்றபோது சிலர் 'என்னுடைய நிலங்களில் அமைக்கக் கூடாது' என்று நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்று விடுகிறார்கள். சில இடங்களிலே சிலர் பிரச்சினைகளை உருவாக்கி விடுகிறார்கள். ஒரு பக்கம் அந்தப் பகுதி மக்களே எங்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு வேண்டிய துணை மின் நிலையத்தை அமைத்து வழித்தடங்களை ஏற்படுத்தினால் அங்கே சில சக்திகள் குறுக்கிட்டுவிடுகின்றன. தேனி மாவட்டத்திலே மட்டுமல்ல; பல்வேறு இடங்களிலே பணிகள் தடைபடுகின்றன. அந்தத் தடைகளையெல்லாம் நீக்குவதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சட்டப்படி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தப் பகுதியிலே உரிய சிறப்புக் கவனம் செலுத்தி, தடையை நீக்கி, தொடர்ந்து அந்தப் பணிகள் நடைபெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

122—

உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம்

***56450—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளத்தில் நெடுஞ்சாலைத் துறை உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?